

தமிழக அரசின் "நான் முதல்வன் திட்டம் மூலம் படித்து குடிமைப் பணிக்குத் தேர்வான ஐ.ஏ.எஸ் தேர்வில் தமிழக அளவில் 7வது இடம் பிடித்த சின்னாளபட்டியைச் சேர்ந்த மாணவர் அருண்பாண்டியன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். அருகில் அருண்பாண்டியன் பெற்றோர் நடராஜன் – தமிழ்ச்செல்வி ஆகியோர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி 56 வது வார்டு அதிமுகவைச் சார்ந்த எஸ்.கிஷோர்குமார்,தமிழக வெற்றி கழகத்தை சார்ந்த இளைஞர்கள் எஸ். ஸ்ரீதர், எஸ். துளசி, வி லக்ஷ்மி, பி நந்தினி, வி.பிரபு ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சிகளிலிருந்து விலகி திமுகவில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வின் போது மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம் உடன் இருந்தார்.

### கடும் நடவடிக்கை பாயும்

## கேஸ் செலவுக்கு தனி கட்டணம் ஓட்டல்கள் வசூலிக்க கூடாது: நுகர்வோர் ஆணையம் எச்சரிக்கை!

புதுடெல்லி,மார்ச்.27–

மேற்கு ஆசியா போரால், நாடு முழுவதும் வர்த்தக காஸ் சிலிண்டருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டல்கள், உணவகங்கள் காஸ் செலவுக்கென தனியாக கட்டணம் வசூலிக்கின்றன.

இது குறித்து மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேசிய நுகர்வோர் உதவி மையத்தில் பெறப்பட்ட புகார்கள் மற்றும் ஊடக அறிக்கைகளின் அடிப்படையில், சில ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் நுகர்வோருக்கு வழங்கும் பில்களில் 'எல்பிஜி கட்டணம்', 'எரிவாயு கூடுதல் கட்டணம்' மற்றும் 'எரிபொருள் செலவு மீட்பு' போன்ற கூடுதல் கட்டணங்கள் வசூலிப்பதை சிசிபிஏ தீவிரமாக கவனத்தில் கொண்டுள்ளது.

இது நியாயமற்ற வர்த்தக நடைமுறையாகும். எந்தவொரு ஓட்டலோ அல்லது உணவகமோ, பில்லில் காஸ் செலவுக்கு கூடுதல் கட்டணங்களை விதிக்கக் கூடாது. இதை மீறுவது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உள்ளாகக் கூடும்.

இவ்வாறு எச்சரித்துள்ளது.

### மேட்டுப்பாளையத்திற்கு

## 432 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வருகை!

மேட்டுப்பாளையம்,மார்ச்.27–

மேட்டுப்பாளையத்திற்கு 432 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டன. தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதியில் மொத்தமாக 360 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கோவை தெற்கு தாலுகா அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் நேற்று முன்தினம் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர், அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பிரித்து அனுப்பப்பட்டன. தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு கோவையில் இருந்து மேட்டுப்பாளையம் சிறுமுகை சாலையில் உள்ள நஞ்சையா லிங்கம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள பாதுகாப்பு அறைக்கு 432 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 468 விவி பேட், 432 கண்ட்ரோல் யூனிட் ஆகியவை பலத்த போலீஸ் பாதுகாப்புடன் பத்திரமாக கொண்டு வரப்பட்டன.


# தேர்தல் செய்திகள்!

### தேர்தல் நடக்கும் 5 மாநிலங்களில்

## ரூ.408 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல்!

சென்னை,மார்ச்.27–

தேர்தல் நடக்கும் 5 மாநிலங்களில் ஆவணமின்றி கொண்டு சென்ற ரூ.408 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.17.44 கோடி பணம், ரூ.37.68 கோடி மதிப்பு மதுபானம், ரூ.167.38 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல். ரூ.23 கோடி மதிப்பிலான அரிய உலோகங்கள், ரூ.163.30 கோடி மதிப்பில் இலவச பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.




சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நியூ கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் VOTE 100% என்ற வடிவில் மனிதச் சங்கிலி போன்று நின்று வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

### தமிழ்நாடு சட்டசபை தேர்தல்;

## ஏப்ரல் 6 வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள்!

சென்னை,மார்ச்.27–

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை இந்திய தலைமை தேர்தல் ஆணையம் கடந்த 15-ந்தேதி அறிவித்தது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும். இதனை முன்னிட்டு அனைத்து கட்சிகளும், கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, நட்சத்திர பேச்சாளர்கள் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இந்நிலையில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்ட செய்தியில், 2026-ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடும் நாள் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

1881-ம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின்கீழ், பொது விடுமுறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க்கிழமை), 01.04.2026 (புதன்கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை) மற்றும் 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்ய இயலாது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) ஆகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



சென்னை தூர்தர்ஷன் கேந்திரா கூட்ட அரங்கில், நேற்று (26.03.2026) தலைமை தேர்தல் அதிகாரி /அரசு முதன்மை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், முன்னிலையில் 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்காக தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு ஒளிபரப்பு /ஒலிபரப்பு தேதி மற்றும் நேரம் ஒதுக்குவதற்கான தேர்வு குலுக்கல் முறையில் நடைபெற்றது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு நிறைவு!

சென்னை,மார்ச்.27–

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க நேற்று கடைசி நாள் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கு பிறகு வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின் படி மாநிலம் முழுவதும் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

இந்நிலையில் விடுபட்ட நபர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்ப்பதற்கு விண்ணப்பிக்க நேற்று இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டது.

நேற்று மாலைக்குள் பெறப்படும் விண்ணப்பங்களை மட்டுமே தேர்தல் அதிகாரிகள் பரிசீலனை செய்வார்கள். இதன்பிறகு விண்ணப்பித்தவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். ஆனால் விண்ணப்பிக்கவில்லை என்றால் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க முடியாது. எனவே 18 வயது பூர்த்தி அடைந்த இளைஞர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் என அனைவரும் தவறாமல் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### 'டில்லி சரணம்பாடிகள்' – 'அரிதாரப் பூச்சு'களின் ஏமாற்று வித்தைகளைப் பொய்யாக்கி

# கொள்கைக் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் வெற்றி நோக்கி விரைகிறார் நம் முதலமைச்சர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 27–

'டில்லி சரணம்பாடிகள்', 'அரிதாரப் பூச்சு'களின் ஏமாற்ற வித்தைகளைப் பொய்யாக்கி, கொள்கை அடிப்படையிலான கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் வெற்றி வாயில் நோக்கி விரைகிறார் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

வரும் ஏப்ரல் 23-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெறும் பொதுத் தேர்தலில், போட்டியிடும் கட்சிகள், அணிகள்பற்றிய இறுதி நிலவரம் இப்போது ஏறக்குறைய உறுதியாகி வெளிவந்துவிட்டது.



**ஒரு நல்லரசின் நாயகராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் களத்தில் உள்ளார்!**

கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அய்ந்தாண்டுகள் அருமையான 'திராவிட மாடல்' ஆட்சி, அதன் தலைவர் முதலமைச்சர் மாண்பமை மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில், மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தேர்தலில், கொள்கையொத்த 23 கட்சிகளுடன் கூட்டணியாக மீண்டும் ஆட்சி அமைக்கும் வகையில், தமிழ்நாட்டின் உரிமைகள், வளர்ச்சி, சமூகநீதி, மதச்சார்பின்மை, மகளிர் நலன், சமத்துவம் இவற்றைத் தனது ஆட்சியின் சாதனைச் சரித்திரங்களாக்கி, களத்தில் வாக்காளர்களின் வரவேற்பைப் பெற்று, திராவிட ஆட்சியின் பாரம்பரிய கொள்கைப் பெருமை மற்றும் சாதனைகளை மேலும் வளர்க்கவும், உள்ளூர் மக்கள் முதல் உலக - புலம் பெயர் மக்கள் வரை பலரது பாராட்டு, வாழ்த்துகளை வரித்துக் கொண்ட ஒரு நல்லரசின் நாயகராக அவர் களத்தில் உள்ளார்!

அவரது தலைமையில், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக - கொள்கைக் கூட்டணியாகவே உருவாகி, திருவாகிய கூட்டணி. வெற்றிக் களங்களைத் தொடர்ந்து பெற்று, முத்திரை பதித்து, நமது தமிழ்நாட்டின் உரிமைகள், பண்பாடு, நாகரிகம், மொழி, மாநில உரிமைகளை விழுங்க நினைக்கும் ஆதிக்க சக்திகளை எதிர்த்து, நிமிர்ந்து, தேர்தல் களத்தில் முன்னிலையில் நிற்கிறார், அவருடன் கூட்டணித் தலைவர்களும் நிற்கின்றனர்.

**எடப்பாடி பழனிசாமி 'டில்லி சரணம்' பாடிவிட்டார்!**

கடந்த கால தேர்தல்களில் தொடர்ந்து சுமார் பத்து முறை தோல்விகளைச் சந்தித்த எதிர்க் கட்சித் தலைவர் - அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், 31 ஆண்டுகாலம் ஆட்சியிலிருந்த ஒரு கட்சியின் மாட்சியைக் குலைக்கும் வண்ணம், 'மோடியா, லேடியா?' என்று அக்கட்சியின் பிரபலத் தலைவராக இருந்த ஜெயலலிதா அம்மையாரின் கருத்துகளைக்கூட தூக்கி எறிந்துவிட்டு, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பிடியிலிருந்து தங்களை மீட்க முடியாத வண்ணம், டில்லிக்குச் சென்று, அங்கே எடுத்த முடிவுகளை ஏற்று, 'டில்லி சரணம்' பாடி கூட்டுக்குள் அடைபட்டுவிட்டார்.

டில்லி - ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் ஆணையை ஏற்று, அங்கே எடுக்கப்பட்ட முடிவினை இங்கே வந்து அறிவிக்கும் பரிதாப நிலையில் உள்ள கூட்டணியில் பெயருக்கு மட்டும் இவர் தலைவராகவும், அமித்ஷாவே முழு அதிகாரம் பெற்ற செயல் தலைவராகவும் இருக்கும் நிலைதான் இறுதிக் காட்சியாக தேர்தல் களத்தில் உள்ளது.

இவர் எதிர்க்கட்சித் தலைவராக 66 சட்டமன்ற உறுப்பினர்களுடன் இருந்தபோதுகூட, தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவோ, 'நீட்' மற்றும் உரிய நிதி பெறுதல் போன்றவற்றிற்காகவோ - வாதாடியோ, போராடியோ வந்த வரலாறு படைத்தவரல்லர்!

**எதிர்பார்த்த நடிகர் கட்சியும் இவர்களை ஏமாற்றி 'பெப்பே' கூறிவிட்டது!**

முன்பிருந்த முழு பலம் இழந்து, பிளவுபட்ட சில கட்சிகளே இவர்களின் அணியில், தேசிய ஜனநாயகக் கூட்டணியா? (NDA). அ.தி.மு.க. கூட்டணியா? எதையும் வலுவுடன் அழுத்தந்திருத்தமாகக் கூட கூற முடியாத இக்கட்டான நிலையில் களம் காணுகின்றன.

மற்றபடி ஊடகங்கள் பெயரளவில் கூறும் அய்ந்து அணிகளில், ஒன்று, வெறும் ஒப்பனை அணி. "நானே ராஜா, எனது ராஜ்ஜியத்தில் மும்மாரி பெய்கிறதா?" என்று அருகில் இருக்கும் சிலரைக் கேட்டே தெரிந்து கொள்ளும் 'அற்புதம்' படைக்கும் அரசியல் மின்மினிப் பூச்சி. மற்றவை பொருட்படுத்த தேவையற்றவை.

**எந்த ஒரு கட்சியும் ஏறிட்டும் பார்க்காத யதார்த்தம்!**

'அதிகாரப் பங்களிப்புத் தருவோம்' என்ற நடிகரின் வெற்றுத் தூண்டிலுக்குக் கூட தமிழ்நாட்டில் எந்த ஒரு கட்சியும் ஏறிட்டும் பார்க்காமல் ஒதுங்கியதுதான் யதார்த்தம்!

மற்றவை சில "ஊடக ஊறுகாய் கட்சிகளும், அவசர 777 பிராண்டுகளும்தான்!"

தி.மு.க. கூட்டணியின் கொள்கை வரலாறும், சாதனைச் சரித்திரமும், மகளிர், இளைஞர், மாணவர், தொழிலாளர், விவசாயிகள் அனைத்துத் தரப்பினர்களின் ஆதரவினை நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒருங்கே பெற்று, வெற்றியின் வாயிலில் நுழைய 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் களம் காண வீரநடை - வேக நடை போட்டு, "234 தொகுதிகளும் நம் தொகுதிகளே" என்று உணர்ச்சிப்பூர்வமாக அறிவித்து விவேக வியூகங்களோடு பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டார்!

**'திராவிட மாடல்' ஆட்சி 2026–இல் அமைவது உறுதி!**

அவர் உழைப்பிற்கு ஈடு, இணை எவரும் இல்லை. அவர்தான் இதயமாகி, எல்லாமுமாகி வெற்றிக் களம் காண வேக நடை போடுகிறார் என்பதால், மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி 2026 இல் என்பது உறுதி! உதயசூரியன் தகத்தகாய ஒளியுடன் வீசி எழுவது முக்காலும் உறுதி!

ஒத்துழைப்புத் தரும் கூட்டணிக் கட்சிகளின் கொள்கை உணர்வு என்றும் மாறாது. நியாயமான கோரிக்கைகளைக்கூட அவர்கள் விட்டுத் தந்ததால், கொள்கை எதிரிகளை அவ்வுறுதி ஏமாற்றமடையவும் செய்தது!

**கொள்கையாளர்களின் பார்வையில்...**

நண்பர் கலைஞானி கமல் ஹாசன் போன்றோர்கூட யதார்த்தம் புரிந்து, மிகவும் பண்போடு "தி.மு.க. கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு" என்ற அவரின் பிரகடனத்தால், முதலமைச்சரின் பாராட்டைப் பெற்றதுடன் கொள்கையாளர்களின் பார்வையிலும் மேலும் உயர்ந்துள்ளார்!

அனைவரும் ஒரே கொள்கைக் குடும்பத்தவர். "பதவிகள் வரும், போகும். இலட்சியங்கள் தான் நிரந்தரமானவை" என்ற நல்ல பாடத்தைத் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அழகுடன் தந்திருக்கின்றனர்.

அதன் தலைவர்களுக்கு நமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நயினார் நாகேந்திரன் மீது வழக்குப் பதிவு செய்ய

# அமலாக்கத்துறைக்கு உத்தரவிடுக!

## சென்னை உயர்நீதி மன்றத்தில் தி.மு.க. மனு!

சென்னை, மார்ச்.27–

2024 மக்களவை தேர்தலின் போது நான்கு கோடி ரூபாய் பணம் கைப்பற்றப்பட்ட விவகாரத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மீது வழக்குப்பதிவு செய்ய அமலாக்கத்துறைக்கு உத்தரவிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது, தாம்பரம் ரயில் நிலையத்தில் நெல்லை செல்லும் விரைவு ரயிலில் நான்கு கோடி ரூபாய் பணத்தை தேர்தல் ஆணையம் கைப்பற்றியது. திருநெல்வேலி மக்களவை தொகுதியில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன், அவரது தொகுதியில் பணப்பட்டுவாடாவில் ஈடுபட, இந்த பணம் கொண்டு செல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில், 4 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழ்நாடு பா.ஜ.க.வின் முன்னாள் அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்ய அமலாக்கத்துறைக்கு உத்தரவிடக்கோரி மாநிலங்களவை தி.மு.க. உறுப்பினர் கிரிராஜன், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த விவகாரத்தில் நயினார் நாகேந்திரன், கேசவ விநாயகம் ஆகியோர் மீது சி.பி.சி.ஐ.டி. வழக்குப்பதிவு செய்துள்ளதை மனுவில் குறிப்பிட்டுள்ளார். மூல வழக்குப்பதிவு செய்தும் இந்த விவகாரத்தில் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்யவில்லை என்றும், நயினார் நாகேந்திரனும், கேசவ விநாயகமும் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் என்பவதால் அமலாக்கத்துறை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொழுநோயால் பாதிக்கப்பட்ட

# நோயாளிகளின் பாதுகாப்பிற்கு அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 27 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 24 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உரிமையைப் பாதுகாக்க, ஒன்றிய அரசிடம் ஏதேனும் நடவடிக்கைகள் உள்ளனவா? என்றும் அதற்கான சுகாதார கட்டமைப்புகளை பலப்படுத்த முன்முயற்சி கள் எடுக்கப் படுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்ற தேவையான தொழில்நுட்ப உதவிகளையும், நிதி உதவிகளையும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது என்றும், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறியும் ஆஷா என்ற அமைப்பின் உதவியுடன் அவர்களுக்கான கண்காணிப்பும் மருத்துவசதிகளையும் மாநில அரசின் உதவியுடன் அளிக்கப்படுகிறது என்றும், சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் கடந்த 2017ம் ஆண்டு முதலாக நடத்தப்பட்டு வருகின்றன என்றும், ஆயூஷ்மான் ஆரோக்ய மந்திர் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடு;த்து வருகிறது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும் திறன் மேம்பாட்டு திட்டங்களும், பயிற்சி வகுப்புகளின் மூலமும், மருத்துவ துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றும், தொழுநோயை கண்டறியவும், அவர்களுக்கு தேவையான மருத்து உதவிகளை உரிய நேரத்தில் வழங்கிடவும் தேவையான முயற்சிகளை ஒன்றிய அரசு மாநில ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து மாவட்ட அளவில் அனைத்து நடவடிக்கைகளையும் தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து மேற்கொண்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.